தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**27.03.2013 A.M**

---

## ஒரு கிலோ பீன்ஸ் ரூ.48, வெண்டைக்காய் ரூ.36

திருவள்ளூரில் காய்கறிகள் விலை திடீரென உயர்ந்ததால் நடுத்தர மக்கள் மிகவும் அவதியடைந்துள்ளனர்.

திருவள்ளூர் மாவட்டத்தில் காய்கறிகள் விவசாயம் நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. மொத்த விவசாயத்தில் 30 சதவீதமாக இருந்த காய்கறி(தோட்டப்பயிர்) விவசாயம் 20 சதவீதத்துக்கும் குறைவாகி வருகிறது.

இதையொட்டி இங்குள்ள வியாபாரிகள் அனைவரும் சென்னையில் உள்ள கோயம்பேடு வணிக வளாகத்துக்குச் சென்று காய்கறிகளை மொத்த விலையில் வாங்கி வந்து திருவள்ளூரில் விற்று வருகின்றனர்.

இந்நிலையில் கடந்த ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் கடும் குளிர் காரணமாக காய்களின் வரத்து குறைந்ததிருந்தது. இதனால் காய்களின் விலை அதிகளவில் விற்கப்பட்டது. அதை தொடர்ந்து குளிர் குறையத் தொடங்கியவுடன் காய்கறிகளின் வரத்து அதிகரித்ததால் விலை குறைந்திருந்தது.

தற்போது மீண்டும் காய்கறிகள் விலை திடீரென உயர்ந்துள்ளது. இதனால் மக்கள் பாதிக்கப்படுகின்றனர். செவ்வாய்க்கிழமை காய்கறிகளின் விலை நிலவரம்(ஒரு கிலோ): வெங்காயம் ரூ.20, தக்காளி ரூ.10, அவரை ரூ.25, பீன்ஸ் ரூ.48, கேரட் ரூ.25, கோஸ் ரூ.16, உருளை ரூ.16, கருணை ரூ.16, சேனை கிழங்கு ரூ.40, மாங்கா

## காய்கறி விலை உயர்வு

திருவள்ளூரில் காய்கறிகள் விலை திடீரென உயர்ந்ததால் நடுத்தர மக்கள் மிகவும் அவதியடைந்துள்ளனர்.

திருவள்ளூர் மாவட்டத்தில் காய்கறிகள் விவசாயம் நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. மொத்த விவசாயத்தில் 30 சதவீதமாக இருந்த காய்கறி(தோட்டப்பயிர்) விவசாயம் 20 சதவீதத்துக்கும் குறைவாகி வருகிறது.

இதையொட்டி இங்குள்ள வியாபாரிகள் அனைவரும் சென்னையில் உள்ள கோயம்பேடு வணிக வளாகத்துக்குச் சென்று காய்கறிகளை மொத்த விலையில் வாங்கி வந்து திருவள்ளூரில் விற்று வருகின்றனர்.

இந்நிலையில் கடந்த ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் கடும் குளிர் காரணமாக காய்களின் வரத்து குறைந்ததிருந்தது. இதனால் காய்களின் விலை அதிகளவில் விற்கப்பட்டது. அதை தொடர்ந்து குளிர் குறையத் தொடங்கியவுடன் காய்கறிகளின் வரத்து அதிகரித்ததால் விலை குறைந்திருந்தது.

தற்போது மீண்டும் காய்கறிகள் விலை திடீரென உயர்ந்துள்ளது. இதனால் மக்கள் பாதிக்கப்படுகின்றனர். செவ்வாய்க்கிழமை காய்கறிகளின் விலை நிலவரம்(ஒரு கிலோ): வெங்காயம் ரூ.20, தக்காளி ரூ.10, அவரை ரூ.25, பீன்ஸ் ரூ.48, கேரட் ரூ.25, கோஸ் ரூ.16, உருளை ரூ.16, கருணை ரூ.16, சேனை கிழங்கு ரூ.40, மாங்காய் ரூ.30, வெண்டை ரூ.36, கத்தரிக்காய் ரூ.24, இஞ்சி ரூ.80.

### விவசாயிகளுக்கு நீர் மற்றும் நில வளப் பயிற்சி

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் வட்டம், அனுமந்தராயன் கோட்டை விவசாயிகளுக்கு, வேளாண்மைப் பொறியியல் துறை சார்பில், நில வளம் மற்றும் நீர் வளப் பயிற்சி முகாம் நடத்தப்பட்டது.

நிகழ்ச்சியில் பங்கேற்ற இளநிலை பொறியாளர் எஸ். முனியப்பன், சொட்டு நீர் பாசனத்தின் அவசியம் குறித்தும், குறைவான செலவில் அதிக மகசூல் பெற சொட்டு நீர் பாசனம் அமைப்பதற்கு சிறு, குறு விவசாயிகளுக்கு அரசு 100 சதவீதம் மானியம் வழங்குவது பற்றியும், விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார்.

பின்னர், இளநிலைப் பொறியாளர் பாபுராஜ், தண்ணீரை சிக்கனமாகப் பயன்படுத்துவது குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தார்.

பயிற்சியின் நிறைவாக, ரெட்டியார்சத்திரம் ஒன்றியம் ஸ்ரீராமபுரம், அம்மாபட்டி பகுதிகளில் சொட்டு நீர் பாசனம் மூலம் பயிரிடப்பட்டுள்ள கரும்பு, தென்னை, முருங்கை உள்ளிட்ட பயிர்களை விவசாயிகள் பார்வையிட்டனர். முகாமில், அனுமந்தராயன்கோட்டை ஊராட்சி

மன்றத் தலைவர் இன்பராஜ், பயிற்சி ஒருங்கிணைப்பாளர் எஸ். முனியப்பன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## மாவட்டத்தில் பரவலாக மழை

தேனி மாவட்டத்தில் திங்கள்கிழமை இரவு பரவலாக மழை பெய்தது.

மழையளவு (மி.மீ.,): தேனி- 14.6, வீரபாண்டி- 63, போடி- 32, கூடலூர்- 24, மஞ்சளாறு- 124, பெரியகுளம்- 82, சோத்துப்பாறை- 36, உத்தமபாளையம்- 10, வைகை அணை- 15, பெரியாறு அணை- 2, தேக்கடி- 25. மாவட்டத்தில் சராசரி 35.64 மி.மீட்டர் மழை பெய்துள்ளது.

அணைகளின் நீர்மட்டம்: வைகை அணை நீர்மட்டம் 45.87 அடியாக இருந்தது. அணைக்கு தண்ணீர் வரத்து விநாடிக்கு 224 கனஅடி. அணையில் இருந்து விநாடிக்கு 60 கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

மஞ்சளாறு அணை நீர்மட்டம் 30 அடி. அணைக்கு நீர்வரத்து விநாடிக்கு 38 கனஅடி. அணையில் இருந்து விநாடிக்கு 8 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

சோத்துப்பாறை அணை நீர்மட்டம் 71.83 அடி. அணைக்கு தண்ணீர் வரத்து 35 கன அடி. அணையில் இருந்து விநாடிக்கு 3 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

பெரியாறு அணை நீர்மட்டம் 112.8 அடி. அணைக்கு தண்ணீர் வரத்து விநாடிக்கு 100 கனஅடி. அணையில் இருந்து தமிழக பகுதிக்கு விநாடிக்கு 100 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

## உதகையில் துவங்கியது கோடை மழை!

பனிக்காலம் முடிந்து வறட்சியில் சிக்கியிருந்த உதகை மற்றும் அதன் சுற்றுப் பகுதிகளில் செவ்வாய்க்கிழமை பெய்த மழையால் அனைத்துத் தரப்பினரும் மகிழ்ச்சியடைந்தனர்.

உதகையில் கோடை சீசனின் தொடக்கமாக மார்ச் இறுதியிலோ அல்லது ஏப்ரல் தொடக்கத்திலோ பலத்த மழையாக பெய்யும் மழை "சம்மர் ஷவர்ஸ்' எனப்படும் கோடை மழை. இந்த மழைக்கு பின்னர்தான் உதகையில் கோடை சீசன் நிகழ்வுகள் களைகட்டும்.

இந்நிலையில் நடப்பாண்டில் மார்ச் மாதத்தின் தொடக்கம் வரை உதகையில் பனியின் தாக்கம் இருந்தது. சில பகுதிகளில் உறைபனி கொட்டிய போதிலும், நகரின் அனைத்துப் பகுதிகளிலுமே

நீர்ப்பனி எனும் லேசான பனி கொட்டி வந்தது. இதனால், அனைத்து நீராதாரங்களுமே வறண்டுவிட்டன.

பார்சன்ஸ்வேலி நீர்த்தேக்கத்தில் மட்டும் ஓரளவுக்கு தண்ணீர் இருப்பு வைக்கப்பட்டிருந்தது. உதகையில் நிலவிய வறட்சியால் பெரும்பாலான பகுதிகளில் குடிநீருக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டிருந்தது. அதேபோல, அரசினர் தாவரவியல் பூங்காவிலும் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டு, மலர்ச் செடிகளுக்குக் கூட தண்ணீர் இல்லாமல் தனியாரிடம் கூடுதல் கட்டணம் செலுத்தி வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது.

அதேபோல, மலைக்காய்கறிகளுக்கும் தண்ணீர் தேவை அதிகரித்திருந்ததால் விவசாயப் பணிகளும் பாதிக்கப்பட்டு, அனைத்துத் தரப்பினரும் மழையை எதிர்நோக்கி இருந்தனர்.

இந்நிலையில் உதகை மற்றும் அதன் சுற்றுப்பகுதிகளில் செவ்வாய்க்கிழமை பகல் 12 மணி முதல் மழை கொட்டத் துவங்கியது. சேரிங்கிராஸ், மத்திய பேருந்து நிலையம், தலையாட்டுமந்து, தொட்டபெட்டா, அரசினர் தாவரவியல் பூங்கா, காந்தல், ஃபிங்கர்போஸ்ட், இந்துநகர் உள்ளிட்ட பகுதிகளில் 4 மணி நேரத்துக்கும் மேலாக மழை நீடித்தது. இதனால் சேரிங்கிராஸ் பகுதி சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்தோடியது.

ஏப்ரல் மாதத்தில் தேர்வுகள் முடிந்து சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிக்கும் என்பதால் உதகையில் பெய்துள்ள இந்த கோடை மழை அனைத்துத் தரப்பினரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

## மஞ்சூரில் மழை; விவசாயிகள் மகிழ்ச்சி

மஞ்சூரில் செவ்வாய்க்கிழமை பிற்பகலில் பெய்த திடீர் மழையால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

கடந்த சில மாதங்களாக மஞ்சூர் பகுதியில் மழை இல்லாத நிலை இருந்து வந்தது. இதனால் வெயிலின் தாக்கம் அதிகரித்தது. மேலும் சமவெளிப் பகுதிகளுக்கு இணையாக வெயில் இருந்ததால் செடி, கொடிகள் காய்ந்து வறட்சி நிலவியது.

வனப்பகுதிக்குள் நீர் நிலைகள் வற்றியதால் யானை, சிறுத்தை, காட்டெருமை, மான் உள்ளிட்ட விலங்குகள், உணவுக்காகவும், குடிநீருக்காகவும் குடியிருப்புப் பகுதிகளுக்கு வருவது அதிகரித்துள்ளது. இதனால் அச்சம் காரணமாக பொதுமக்கள் இரவு நேரங்களில் வெளியில் நடமாடுவதை தவிர்த்தனர்.

கடும் வெயில் காரணமாக மஞ்சூர் பகுதி மக்களின் குடிநீர் தேவையைப் பூர்த்தி செய் யும் நீராதாரங்களில் நீர் வரத்து குறைந்ததால் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் நிலை உருவானது. கோடைக்காலம் தொடங்குவதற்கு முன்பே வெயிலின் பாதிப்பு அதிகரித்து காணப்படுவதால் பொதுமக்களும், விவசாயிகளும் கவலை அடைந்தனர்.

இந்நிலையில் செவ்வாய்க்கிழமை பிற்பகல் திடீரென மழை பெய்தது. தொடர்ந்து இரண்டு மணி நேரம் பெய்த மழையால் குளிர்ச்சி நிலவியது.

இந்த மழை விவசாயத்துக்கும், குடிநீர் தேவைக்கும் போதாது என்றாலும் வெயிலின் தாக்கம் குறைந்திருப்பதுடன் மலைக் காய்கறி விவசாயத்துக்கு ஏற்றது என்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## சூறாவளி: 2 ஆயிரம் வாழைகள் சேதம்

பொள்ளாச்சி பகுதியில் திங்கள்கிழமை வீசிய சூறாவளிக் காற்றினால் 2 ஆயிரம் வாழை மரங்கள் சேதமடைந்தன.

பொள்ளாச்சி தாலுகா பகுதியில் திங்கள்கிழமை மாலை திடீரென சூறாவளிக் காற்றுடன் கன மழை பெய்தது. இதில் ராசக்காபாளையம் கிராமத்தில் ராகவன் என்பவருக்கு சொந்தமான ஓர் ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டிருந்த 500 வாழை மரங்களும், தொப்பம்பட்டி கிராமத்தில் ஓர் ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டிருந்த 500 வாழை மரங்களும் சரிந்து சேதமடைந்தன.

ராசக்காபாளையம் கிராமத்தில் ஆறுமுகம், ராமசாமி ஆகியோரின் வீடுகளும் சூறாவளிக் காற்றினால் சேதமடைந்தன.

நஞ்சேகவுண்டன்புதூர் கிராமத்தில் 1,000 வாழை மரங்கள் சூறாவளிக் காற்றினால் அடியோடு சரிந்தன.

இதுகுறித்து விவசாயிகள் கூறியது: வறட்சி காரணமாக பயிர்கள் காய்ந்துவிட்ட நிலையில் கிணற்று நீரின் மூலம் வாழை மரங்களுக்கு பாசனம் அளிக்கப்பட்டு வந்தது. இந்நிலையில் இந்த வாழை மரங்களும் காற்றினால் சேதம் அடைந்துள்ளன. சேதமடைந்த வாழைகளுக்கு அரசு உடனடியாக நிவாரணம் வழங்க வேண்டும் என்றனர்.

## நிறம் மாறும் கோழிக்கொண்டை!

பல்லடம் பகுதியில் கடும் வெப்பம் காரணமாக  கோழிக்கொண்டைப் பூக்களின் நிறம் மாறுபட்டுள்ளதால், இப் பூவை சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.

திருப்பூர் மாவட்டம், பல்லடம் சுற்று வட்டாரப் பகுதிகளான சித்தம்பலம், ஆலூத்துப்பாளையம், கரசமடை, வெங்கிட்டாபுரம், அவினாசிபாளையம், கணபதிபாளையம், கவுண்டம்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் 100-க்கும் மேற்பட்ட ஏக்கரில் கோழிக்கொண்டைப் பூக்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

இப் பூக்கள் சிவப்பு, ஊதா ஆகிய இரு நிறங்களில் மலரும். ரோஜா, சம்பங்கி, செண்டுமல்லிப் பூ மாலைகளுக்கு அழகு சேர்க்க கோழிக்கொண்டைப் பூக்களும் சேர்க்கப்படும். இப் பூக்கள் எல்லாப் பருவத்திலும் வளரக்கூடியது. இங்கு உற்பத்தி செய்யப்படும் பூக்கள், திருப்பூர் மற்றும் கோவை பூ மார்க்கெட்டிற்கு விற்பனைக்காக அனுப்பப்படுகிறது. திருமண முகூர்த்தம், கோயில் திருவிழாக் காலங்களில் இப் பூவுக்கு நல்ல கிராக்கி இருக்கும்.

இப்போது நிலவும் கடும் வெப்பம் காரணமாக இப் பகுதியில் சாகுபடி செய்யப்பட்டுள்ள கோழிக்கொண்டைப் பூக்கள் உண்மையான நிறத்தை இழந்து வெளிர் நிறத்தில் காணப்படுகிறது. மேலும், ஏக்கருக்கு 500 முதல் 600 கிலோ வரை கிடைக்க வேண்டிய பூக்களின் விளைச்சல் பாதியாகக் குறைந்து போனது. மீதிப் பூக்களும் நிறமில்லாமல் போவதால் மார்க்கெட்டில் விலை கிடைப்பதில்லை. இதனால் இப் பூ சாகுபடி செய்துள்ள விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து, இப் பூவை சாகுபடி செய்துள்ள விவசாயி கோபாலகிருஷ்ணன் கூறியது:

மற்ற விவசாயப் பயிர்களைவிட கோழிக்கொண்டைப் பூக்கள் சாகுபடி குறைந்த முதலீட்டில் நிறைந்த லாபம் தரும் என்பதால் இப் பூ விவசாயத்தை ஆர்வமுடன் செய்து வருகிறோம். அறுவடைக்கு வந்த 4 மாதமும் பலன் தரக்கூடியது என்பதாலும், தினசரி வருவாயை ஈட்டித் தருவதாலும் இப் பூ சாகுபடியை விவசாயிகள் ஆர்வத்துடன் செய்து வருகின்றனர்.

இந் நிலையில், கடும் வெப்பம் காரணமாக கோழிக்கொண்டைப் பூக்கள் உரிய நிறத்தை இழந்து காணப்படுகிறது. இப் பூக்களை வியாபாரிகள் வாங்குவதில்லை. அதைச் சந்தையில் விற்க முடியாமல் நஷ்டத்தைச் சந்திக்க வேண்டியுள்ளது. கோழிக்கொண்டைப் பூ கிலோ ரூ.40-க்கு விற்கும் நிலையில், இயற்கை நிறம் மாறுபட்டதால் வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது என்றார்.

## பண்ணைக் குட்டையில் மீன் வளர்க்க மானியம்

அரியலூர் மாவட்டத்தில் பண்ணைக் குட்டைகள் அமைத்து, மீன் குஞ்சு வளர்க்க மானியம் வழங்கப்படுகிறது என்றார் மாவட்ட ஆட்சியர் எம். ரவிக்குமார்.

இதுகுறித்து அவர் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு:


வறட்சியால் பாதிக்கப்பட்ட டெல்டா பகுதி விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக தமிழக முதல்வர் அறிவித்துள்ள சிறப்புத் திட்டத்தின் கீழ், அரியலூர் மாவட்டத்தில் உள்ள திருமானூர் மற்றும் தா. பழூர் ஊராட்சி ஒன்றியங்களில் விருப்பமுள்ள விவசாயிகளின் வயல்களில் 15 மீட்டர் சதுரம் அல்லது 30 மீட்டர் சதுர அளவில் தேசிய வேலை உறுதித் திட்டத்தின் மூலம் ரூ. 1.5 லட்சத்தில் பண்ணைக் குட்டைகள் அமைத்துத் தரும் திட்டம் நிறைவேற்றப்பட உள்ளது.

இதன் கீழ் அமைக்கப்படும் பண்ணைக் குட்டைகள் மூலம் மழைநீரைச் சேமித்து வைத்து பயிர்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளவும், சேமித்து வைத்துள்ள மழை நீரைப் பயன்படுத்தி மீன் வளர்த்து கூடுதல் வருமானம் பெறவும் வழி செய்யப்பட்டுள்ளது.

இதன்படி மீன் குஞ்சு வளர்ப்புக்கு 30 மீட்டர் சதுர பண்ணைக் குட்டைக்கு ரூ. 30 ஆயிரமும், 15 மீட்டர் சதுர பண்ணைக் குட்டைக்கு ரூ. 17,500-ம் மானியமாக வழங்கப்படும். இத்திட்டம் செயல்படுத்துவது தொடர்பான விவசாயிகள் கலந்தாய்வுக் கூட்டம், மாவட்ட ஆட்சியர் தலைமையில் ஏப். 3 காலை 11 மணிக்கு திருமானூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெறுகிறது.

எனவே, அனைத்து விவசாயிகளும் இக் கூட்டத்தில் பங்கேற்று, திட்ட விவரங்களை அறிந்து பயன் பெறலாம் என்றார் அவர்.

## எண்டோசல்ஃபான்: பாதிக்கப்பட்டோருக்கு சிறப்பு நிவாரணத் திட்டம்



எண்டோசல்ஃபான் பூச்சிக்கொல்லி மருந்து தூவப்பட்டதால் பாதிக்கப்பட்டோருக்கு சிறப்பு நிவாரணத் திட்டத்தை கேரள முதல்வர் உம்மன் சாண்டி அறிவித்துள்ளார்.

கடந்த 1990-ல் கேரள மாநிலம் காசர்கோடு மாவட்டத்தில் விமானம் மூலம் முந்திரி தோட்டங்களில் எண்டோசல்ஃபான் ரசாயன மருந்து தெளிக்கப்பட்டது. இதில் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் வழங்குவது குறித்த ஆலோசனைக் கூட்டம் திருவனந்தபுரத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

பின்னர் இதுகுறித்து முதல்வர் உம்மன் சாண்டி கூறியது: எண்டோசல்ஃபான் தெளிக்கப்பட்டதால் பாதிக்கப்பட்டோருக்கு இலவச சிகிச்சை, அத்தியாவசியப் பொருள்கள், மாதாந்திர ஓய்வூதியம் உள்ளிட்டவை வழங்கப்படும். மேலும் தேசிய மனித உரிமைகள் ஆணைய பரிந்துரையின்படி எண்டோசல்ஃபான் தெளிப்பால் இறந்தவர்களுக்கு ரூ.5 லட்சம் நிதியுதவி வழங்கப்படும் என்றார் சாண்டி.

## டிஏபி, பொட்டாஷ் உரங்களுக்கான மானியத்தைக் குறைக்க அரசு முடிவு

சர்வதேச சந்தையில் விலை குறைந்துள்ளதை அடுத்து, டி.ஏ.பி மற்றும் பொட்டாஷ் (எம்.ஓ.பி) உரங்களுக்கான மானியத்தை குறைக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

பாஸ்பேட்டிக், பொட்டாசிக் உரங்களுக்கான மானியத்தைக் குறைக்க உரத்துறை அமைச்சகம் முடிவு செய்துள்ளது.

நடப்பு நிதியாண்டில் டிஏபி உரத்துக்கு டன்னுக்கு ரூ.14,350 கோடி மானியம் அளிக்கப்படுகிறது. இதனை டன்னுக்கு ரூ.2,000 கோடி குறைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அதே போல் டன்னுக்கு ரூ.14,400 கோடி அளிக்கப்படும் பொட்டாஷுக்கான (எம்.ஓ.பி) மானியம் ரூ.2,700 கோடி குறைக்கப்படவுள்ளது.

## இன்று மழை பெய்யும்

வெப்பச் சலனம் காரணமாக தென் தமிழகத்தில் இன்று மழை பெய்யும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வடதமிழக உள்பகுதியின் சில இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சில நாள்களுக்கு முன்பு அரபிக்கடலில் லட்சத்தீவு அருகே குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவானது. அதன் காரணமாக தமிழகத்தில் சில நாள்களுக்கு மழை பெய்யும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் காற்றழுத்தத் தாழ்வு நிலை வலுவிழந்ததால் தமிழகத்தில் மழை பெய்ய வாய்ப்பில்லை என வானிலை மையம் அறிவித்திருந்தது. இந்த நிலையில் செவ்வாய்க்கிழமை தென் தமிழகத்தில் மழை பெய்தது. மதுரை, தேனி, திருநெல்வேலி மாவட்டங்களில் கணிசமான அளவு மழை பெய்தது.

வெப்பச் சலனம் காரணமாக மழை பெய்ததாக வானிலை மைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தென் தமிழகம், வட தமிழகத்தின் சில இடங்களில் இன்றும் மழை பெய்ய வாய்ப்புள்ளதாக அறிவிப்பு வெளியாகியுள்ளது.

செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிவரை பதிவான மழை அளவு (மில்லி மீட்டரில்): சோழவந்தான், பெரியகுளம் - 90, மதுரை மாவட்டம் வாடிபட்டி, திருநெல்வேலி மாவட்டம் அரியகுடி - 80, செங்கோட்டை, தென்காசி, பெரியாறு அணை, உசிலம்பட்டி - 70, ராஜபாளையம் - 60, பாளையங்கோட்டை, கன்னியாகுமரி - 40, தேனி மாவட்டம் போடிநாய்க்கனூர், சங்கரன்கோவில் - 30.

### மேட்டூர் அணை நீர்மட்டம்: 28.01 அடி

மேட்டூர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை மாலை 28.01 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 91 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 500 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

### வறட்சியின் பிடியில் குமரி அரசு பழப் பண்ணை

கன்னியாகுமரி அரசு பழப்பண்ணையில் உள்ள மரங்கள் மற்றும் செடிகளை வறட்சியின் பிடியில் இருந்து காப்பாற்ற தனியாரிடம் இருந்து தண்ணீர் விலைக்கு வாங்கி பயன்படுத்தப்பட்டு வருகிறது.

கன்னியாகுமரியில் இருந்து நாகர்கோவில் செல்லும் முக்கிய சாலையில் 31 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது அரசு பழப்பண்ணை. இங்கு 400 பெரிய மாமரங்கள், சப்போட்டா, கொய்யா, மாதுளை பயிரிடப்பட்டுள்ளது.

இது தவிர ஒட்டு பதியன் முறையில் பிச்சி, ரோஜா, முல்லை மற்றும் அலங்கார செடிகள் பயிரிடப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. இங்கு மாவட்டம் முழுவதிலும் இருந்து வரும் மக்கள்

பல்வேறு செடிகள், மரக்கன்றுகளை தோட்டங்கள் மற்றும் வீடுகளுக்கு வாங்கிச் செல்கின்றனர். இதுதவிர செடிகள் வெளிமாவட்டங்களுக்கு ஏற்றுமதியும் செய்யப்பட்டு வருகிறது.

மரங்கள் மற்றும் செடிகளின் வளர்ச்சிக்காக பழப்பண்ணை வளாகத்தில் ஒரு கிணறு, 2 ஆழ்குழாய்க் கிணறுகள் மற்றும் 3 குட்டைகள் அமைந்துள்ளது. பருவமழை பொய்த்துள்ள சூழ்நிலையில் கடுமையான வறட்சி ஏற்பட்டுள்ளது.

இதனால் இங்குள்ள கிணறுகள் மற்றும் குட்டைகள் தண்ணீர் இன்றி வறண்ட நிலையில் உள்ளது.

இந்நிலையில் மரங்கள், செடிகளைக் காப்பாற்ற தனியாரிடம் இருந்து நாளொன்றுக்கு தலா 14 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட 4 வாகனங்களில் தண்ணீர் விலைக்கு வாங்கப்பட்டு மரங்கள், செடிகளுக்கு பாய்ச்சப்பட்டு வருகிறது.

## உர மானியம் டன்னுக்கு ரூ.2,700 குறைய வாய்ப்பு



புதுடில்லி:சர்வதேச சந்தையில், டை அமோனியம் பாஸ்பேட் (டீ.ஏ.பி.,) மற்றும் முரேட் ஆப் பொட்டாஷ் (எம்.ஓ.பி.,) உரங்களின் விலை வீழ்ச்சி கண்டுள்ளது. இதனால், வரும் 201314ம் நிதியாண்டிற்கு, இவ்வகை உரங்களுக்கான மானியத்தை, மத்திய அரசு குறைக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

இதன்படி, ஒரு டன் டீ.ஏ.பி.,க்கான மானியம், 2,000 ரூபாய் வரை குறைக்கப்பட்டு, 12,350 ரூபாயாக நிர்ணயிக்கப்படும் என, எதிர்பார்க்கப்படுகிறது. அதுபோன்று, ஒரு டன் எம்.ஓ.பி., விலை, 2,700 வரை குறைக்கப் பட்டு, 11,700 ரூபாயாக நிர்ணயிக்கப்பட வாய்ப்பு உள்ளது என, உர அமைச்சக அதிகாரி தெரிவித்தார்.

நடப்பு 201213ம் நிதியாண்டில், ஒரு டன் டீ.ஏ.பி., உரத்திற்கு 14,350 ரூபாயும், எம்.ஓ.பி.,க்கு 14

ஆயிரம் ரூபாயும் மானியமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது, சென்ற நிதியாண்டில், முறையே 19,783 ரூபாய் மற்றும் 16,054 ரூபாயாக இருந்தது.சர்வதேச சந்தை நிலவரத்தின் அடிப்படையில், உள்நாட்டில் உர மானியம் நிர்ணியக்கப்படுகிறது. தற்போது, உலகளவில், உரங்களின் விலை வீழ்ச்சி கண்டுள்ளதால், அரசு உர மானியத்தை குறைக்கும் என, அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

## வேளாண் பொருட்கள் ஏற்றுமதியில் புதிய சாதனை



நடப்பு 201213ம் நிதியாண்டின், முதல் 10 மாதங்களில், நாட்டின் வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி, 1,01,504 கோடி ரூபாயை எட்டி புதிய சாதனை படைத்துள்ளது. இது, கடந்த நிதியாண்டின், இதே காலத்தில், 62,244 கோடி ரூபாயாக இருந்தது.ஆக, மதிப்பீட்டு காலத்தில், இதன் ஏற்றுமதி, 63 சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளது என, வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (அபெடா) தெரிவித்துள்ளது.

வரவேற்பு:சர்வதேச பொருளாதார சுணக்க நிலையிலும், நம் நாட்டின் உணவுப் பொருட்கள் ஏற்றுமதி சிறப்பான அளவில் உயர்ந்துள்ளது. இது, உலகளவில், இதற்கான வரவேற்பு அதிகரித்து வருவதை எடுத்துக்காட்டுவதாக உள்ளது.இதையடுத்து, நடப்பு நிதியாண்டில், நாட்டின் வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி, 1.25 லட்சம் கோடி ரூபாயை தாண்டும் என, அபெடாவின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மதிப்பீட்டு மாதத்தில், மேற்கொள்ளப்பட்ட ஒட்டு மொத்த உணவுப் பொருட்கள் ஏற்றுமதியில், உணவு தானியங்களின் பங்களிப்பு, 40 சதவீதத்திற்கும் அதிகமாக உள்ளது. குறிப்பாக, உலர்ந்த மற்றும் பதப்படுத்தப் பட்ட காய்கறிகள், மாம்பழ கூழ், பருப்பு வகைகள் உள்ளிட்டவற்றின் ஏற்றுமதி, மிக அதிகளவில் உயர்ந்துள்ளது.

நடப்பு நிதியாண்டின், ஏப்ரல் முதல் ஜனவரி வரையிலான முதல் பத்து மாத காலத்தில், மலர்கள் ஏற்றுமதி, 638 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. இது, கடந்த நிதியாண்டின் இதே காலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதியை (508 கோடி ரூபாய்) காட்டிலும், 25.52 சதவீதம் அதிகமாகும்.

காய்கறிகள்:இதே காலத்தில், பழங்கள் மற்றும் காய்கறிகள் ஏற்றுமதி, 7.04 சதவீதம் அதிகரித்து, 4,437 கோடியிலிருந்து, 4,749 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. பதப்படுத்தப்பட்ட பழங்கள் மற்றும் காய்கறிகள் ஏற்றுமதி, 11.99 சதவீதம் வளர்ச்சி கண்டு, 3,062 கோடியிலிருந்து, 3,429 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது.

உணவு தானியங்கள்:மதிப்பீட்டு காலத்தில், பதப்படுத்தப்பட்ட இறைச்சி, முட்டை, பால் உள்ளிட்ட பொருட் களின் ஏற்றுமதி, 31.35 சதவீதம் உயர்ந்து, 12,286 கோடியிலிருந்து, 16,137 கோடி ரூபாயாக அதிகரித்து உள்ளது. உணவு தானியங்கள் ஏற்றுமதி, 73.77 சதவீதம் வளர்ச்சி கண்டு, 23,637 கோடியிலிருந்து, 41,075 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது.மேலும், பதப்படுத்தப்பட்ட இதர பொருட்கள் ஏற்றுமதியும், 93.71 சதவீதம் உயர்ந்து, 18,314 கோடியிலிருந்து, 35,476 கோடி ரூபாயாக வளர்ச்சி கண்டுள்ளது.

மத்திய வர்த்தக அமைச்சகம், பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதியை அதிகரிக்கும் வகையில், பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. சமீபகாலமாக, குறிப்பாக, ஐரோப்பிய நாடுகளுக்கு, இவற்றின் ஏற்றுமதியை அதிகரிக்க, விரைந்து நடவடிக்கை எடுத்து வருகிறது.இதன் பயனாக, சென்ற 200910ம் நிதியாண்டில், 11,178 கோடியாக இருந்த, ஐரோப்பிய நாடுகளுக்கான உணவுப் பொருட்கள் ஏற்றுமதி, நான்கு ஆண்டுகளில், பத்து மடங்கு வளர்ச்சி கண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இறைச்சி:இந்தியாவிலிருந்து, அரிசி வகைகள், காபி, உலர்ந்த மற்றும் பதப்படுத்தப்பட்ட காய்கறிகள், கோழி இறைச்சி, முட்டை ஆகியவை ஐரோப்பிய நாடுகளுக்கு குறிப்பாக, ஜெர்மனிக்கு அதிகளவில் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.அமெரிக்காவிற்கு, தானிய உணவுகள், கொத்தவரை, கோகோ பொருட்கள்,தேன் ஆகியவை அதிகளவில் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.இவை தவிர, நாட்டின் வேளாண் பொருட்கள் ஏற்றுமதியில், இதர ஆசிய நாடுகளின் சந்தைகளும் முக்கிய பங்களிப்பை கொண்டுள்ளன.

பிசினஸ் ஸ்டாண்டர்ட் உடன் இணைந்து

இன்றைய வேளாண் செய்திகள்

27.03.2013 A.M

## பயிர் நிவாரண உதவி விவசாயிகள் கோரிக்கை

தஞ்சாவூர்: "தஞ்சையில், மழையின்றி பயிர் நஷ்டம் ஏற்பட்டும் உரிய நிவாரணம் வழங்கப்படவில்லை' எனக்கூறி, விவசாயிகள் கலெக்டரிடம் புகார் மனு கொடுத்தனர். தஞ்சை மாவட்டம், தஞ்சை தாலுக்கா, ஆவாரம்பட்டி பஞ்., மற்றும் தொண்டராயன்பாடி பஞ்., விவசாயிகள் 50க்கும் மேற்பட்டோர், தமிழக விவசாயிகள் சங்க தஞ்சை மாவட்டத்தலைவர் காமராஜ், விவசாய தொழிலாளர்கள் சங்க மாவட்ட செயலாளர் பக்கிரிசாமி, ராயமுண்டான்பட்டி ஜீவக்குமார் ஆகியோர், தஞ்சை கலெக்டர் அலுவலகத்துக்கு நேற்று வந்தனர். பின்னர் கலெக்டரிடம் கொடுத்த மனுவில் கூறியிருப்பதாவது: தொண்டராயன்பாடி பகுதியில், கடந்த சம்பா நெற்பயிரை நேரடி நெல் விதைப்பு செய்தோம். இப்பகுதியிலுள்ள விச்சலூர் படுகை, பாலாயிவயல் பகுதி மக்கள் 250க்கும் மேற்பட்டோர் 310 ஏக்கரில் பயிர் செய்திருந்தோம். ஆனால், காவிரி நீரின்றி, மழைநீரின்றி பயிர்கள் வாடி கருகி விட்டன. இந்நிலையில், இழப்பீடு பட்டியலில் பெயரை சேர்க்கவில்லை. இதனால், அரசு நிவாரணம் கிடைக்காத சூழல் ஏற்பட்டுள்ளது. எனவே பட்டியலில் சேர்த்து, உரிய நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு, அதில், கூறியுள்ளனர்.

## தோட்டக்கலைத்துறையினர் வறட்சி குறித்து மறு ஆய்வு நடத்த முடிவு

திண்டுக்கல்:தோட்டக்கலைத்துறை சார்பில் தனிக்குழு அமைக்கப்பட்டு, வறட்சியால் பாதிக்கப்பட்ட பயிர்கள் குறித்து மதிப்பீடு செய்யப்படும், என, கலெக்டர் வெங்கடாசலம் தெரிவித்தார். திண்டுக்கல் மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை அமைச்சர்கள் தலைமையிலான குழு சமீபத்தில் ஆய்வு செய்தது. இந்த குழுவினர் வேளாண்மை தொடர்பான சாகுபடி நிலங்களை மட்டுமே மதிப்பீடு செய்ததாகவும், தோட்டக்கலைத்துறை பயிர்கள் குறித்து எந்த அறிவிப்பும் வெளியிடவில்லை என்றும் விவசாயிகள் அதிருப்தியடைந்தனர். தோட்டக்கலைத்துறை தொடர்பான பயிர்களை ஆய்வு செய்து நிவாரணம் வழங்க அதிகாரிகள்

நடவடிக்கை எடுக்கவேண்டும், என கேட்டுக்கொண்டனர். அதிகாரிகள் கூறியதாவது: தோட்டக்கலைத்துறையை பொறுத்தவரை 50 சதவீதத்திற்கு அதிகமாக பயிர்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டிருந்தால் மட்டுமே நிவாரணம் அளிப்பது தொடர்பான அறிக்கையினை தாக்கல் செய்ய வேண்டுமென்று உத்தரவிடப்பட்டுள்ளது. திண்டுக்கல் மாவட்டத்தில் பெரும்பாலான பயிர்கள் அரசின் அறிவிப்பிற்கேற்ப பாதிக்கப்படாததால் தாங்கள் அறிக்கை அனுப்பவில்லை, என்றனர். "தோட்டக்கலைத்துறை சார்பில் தனி குழு அமைக்கப்பட்டு அனைத்து நிலங்களையும் பார்வையிட்ட பின்பு நிவாரணம் அளிப்பது தொடர்பாக அரசுக்கு பரிந்துரைக்கப்படும்,' என கலெக்டர் வெங்கடாசலம் விவசாயிகளிடம் உறுதி அளித்தார்.

## வரத்து குறைவால் தக்காளி விலை உயர வாய்ப்பு

ஒட்டன்சத்திரம்:ஒட்டன்சத்திரத்தில் தக்காளி விலை கிலோ ரூ.4 க்கு விற்றது.ஒட்டன்சத்திரம் மற்றும் சுற்றி உள்ள கிராமப்பகுதிகளில் தக்காளி அதிகமாக பயிரிடப்பட்டு வருகிறது. சில ஆண்டுகளுக்கு முன்பு வரை நாட்டு தக்காளி ரகங்களே பயிரிடப்பட்டன. தற்போது ஒட்டுரக தக்காளி அதிகமாக விளைவிக்கப்படுகிறது. தக்காளி செடிகள் மழையால் அழுகிப்போகாமல் இருப்பதற்கும், வெயிலால் வெதும்பி போகாமால் இருக்கவும் கொத்தயம், தேவத்தூர், கேதையுறும்பு உள்ளிட்ட இடங்களில் கொடித்தக்காளிகள் அதிகமாக விளைவிக்கப்படுகிறது.போதிய மழையின்மை காரணமாக பல இடங்களில் நடப்பட்டிருந்த தக்காளி செடிகள் காய்ந்து விட்டன. இதில் இருந்து தப்பிய செடிகள் நல்ல மகசூலை அளித்து வந்தன. இதன்காரணமாக சென்ற வாரம் தக்காளி கிலோ ரூ.2 க்கு விற்றது. ஆனால் வரத்து சற்று குறைந்து, தேவை அதிகமானதால் இதன் விலை கிலோ ரூ. 4 க்கு உயர்ந்துள்ளது. கமிஷன்கடை உரிமையாளர் முருகேசன் கூறுகையில்; ""சென்றவாரம் சரிந்திருந்த தக்காளி விலை, தற்போது உயர்ந்துள்ளது. நாட்கள் ஆக ஆக தக்காளி வரத்து குறையும் என்பதால் விலை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது,'' என்றார்.

## வனவிலங்குகளால் பாதிக்கப்பட்ட விவசாயிக்கு நிவாரணம் வழங்கல்

பெரம்பலூர்: வனவிலங்குகளால் பாதிக்கப்பட்ட, ஒன்பது விவசாயிகளுக்கு, ஒரு லட்சத்து, 87 ஆயிரம் ரூபாய் நிவாரண தொகைக்கான செக்கை, பெரம்பலூர் கலெக்டர் தரேஷ்அஹமது வழங்கினார்.

பெரம்பலூர் மாவட்டத்தில் வனவிலங்குகளால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம், கலெக்டர் அலுவலக மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டரங்கில்

நடந்தது. நிகழ்ச்சியில் வனவிலங்குகளால் பாதிக்கப்பட்ட, ஒன்பது விவசாயிகளுக்கு, ஒரு லட்சத்து, 87 ஆயிரம் ரூபாய் நிவாரண தொகைக்கான செக்குகளை, பெரம்பலூர் கலெக்டர் தரேஷ்அஹமது வழங்கி பேசியதாவது:

பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள வனபகுதிகளில் மான், காட்டுப்பன்றி ஆகிய வன விலங்குகளும், பறவையினத்தில் மயிலும் அதிகம் உள்ளன. இவை குடிநீர் தேவைக்காக வனப்பகுதியை ஒட்டியுள்ள விவசாய நிலப்பகுதிகளுக்கு வருவதால், விவசாயிகள் பாதிப்புக்குள்ளாகின்றனர்.

வனவிலங்குகளின் குடிநீர் தேவையை சரிசெய்யும் வகையில், வேப்பந்தட்டை யூனியனுக்குட்பட்ட வனபகுதியில், 10 ஆழ்துணை கிணறுகளும், பெரம்பலூர், வேப்பூர், ஆலத்தூர் யூனியனுக்குட்பட்ட வனபகுதிகளில் தலா, ஐந்து ஆழ்துளை கிணறுகளும் சேர்த்து, மொத்தம், 25 ஆழ்துளை கிணறுகள் அமைத்து, வனவிலங்குகள் நீர்பருக ஏற்பாடுகள் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வனவிலங்குகளால் பாதிக்கப்படுகின்ற விவசாயிகள், தங்கள் பகுதி வி.ஏ.ஓ.,விடம் பாதிப்பு குறித்து புகார் தெரிவித்தால், 24 மணி நேரத்துக்குள் பாதிக்கப்பட்ட விளைநிலத்தை பார்வையிட்டு, அறிக்கை வழங்க வி.ஏ.ஓ., விவசாயத்துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த அறிக்கைகளின் அடிப்படையில், பாதிப்புக்குள்ளான விவசாயிகளுக்கு நிவாரணம் விரைந்து வழங்கப்படும். வனவிலங்குகள் விவசாய பகுதிகளுக்குள் வராமல் தடுக்க, தடுப்பு அமைப்புகள் மக்கள் பங்களிப்புடன் செயல்படும் தன்னிறைவு திட்டத்தின் மூலம் மேற்கொள்ளவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறு கலெக்டர் பேசினார்.

கூட்டத்தில் மாவட்ட வனஅலுவலர் வடிவேலு, கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) கனகசபை மற்றும் விவசாயிகள், வேளாண்மைத்துறை அலுவலர்கள் பங்கேற்றனர்.

### காட்டுப்பன்றி தீண்டாத மூலிகை பயிர் கோலியாஸ் பயிரிட விவசாயிகள் ஆர்வம்

ஆர்.கே.பேட்டை: விவசாயப் பயிர்களை காட்டுப் பன்றிகள் நாசம் செய்வதை கட்டுப்படுத்த முடியாமல் திணறிய விவசாயிகள், கோலியாஸ் மூலிகை பயிருக்கு மாறி வருகின்றனர். இதனால், உணவுப் பயிர்கள் பயிரிடப்படுவது குறைந்து வருகிறது.கோலியாஸ் எனும் செடியில் விளையும் கிழங்கு, மூலிகை மருந்துகள் செய்யப் பயன்படுகிறது. இதற்கு நல்ல ஏற்றுமதி வாய்ப்பு உள்ளது.

கிழங்கு வகை பயிர்கள் என்றாலே, காட்டுப் பன்றிகளுக்கு மிகவும் பிடிக்கும்.ஆறு மாதங்களில்...ஆனால், கோலியாஸ் கிழங்கை காட்டுப்பன்றிகள் தீண்டுவது இல்லை. இதனால், விவசாயிகள் பலரும் கோலியாஸ் பயிரிட ஆர்வம் காட்டுகின்றனர்.

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு, திருத்தணி, ஆர்.கே.பேட்டை உள்ளிட்ட ஒன்றியங்களில், கோலியாஸ் அதிக அளவில் பயிர் செய்யப் படுகிறது. நடவு செய்த ஆறு மாதங்களில் அறுவடை செய்யலாம்.ஒரு ஏக்கருக்கு ஒரு டன் கிழங்கு கிடைக்கும். ஒரு டன் கிழங்கு, 25 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. ஒரு ஏக்கர் தண்டு, 2,500 ரூபாய். தண்டுகள் மறு நடவு செய்ய பயன்படுகின்றன.முதலீடு இல்லாமல் வாரம் ஒரு முறை தண்ணீர் பாய்ச்சினால் போதுமானது. கிழங்கு கொள்முதல் செய்பவர்களே, உரம் மற்றும் மருந்து வகைகளை கடனாக கொடுக்கின்றனர். முதலீடு இல்லாமல், பயிர் பாதிப்பு இல்லாமல் நல்ல வருமானம் கிடைப்பதால், விவசாயிகள் கோலியாஸ் பயிர் செய்ய துவங்கி உள்ளனர்.இதையடுத்து, நெல், கம்பு, கேழ்வரகு உள்ளிட்ட உணவுப்பயிர்களை விளைவிப்பது குறைந்து வருகிறது.

### மார்கெட் கமிட்டிக்குமக்காசோளம் வருகை

சின்னசேலம்:சின்னசேலம் மார்கெட் கமிட்டிக்கு மக்கா சோளம்,எள் விற்பனைக்காக கொண்டு வந்தனர்.நேற்று முன்தினம் மார்கெட் கமிட்டிக்கு மக்கா சோளம் 130 மூட்டைகளும், எள் ஆறு மூட் டைகளும் வந்தன. மக்கா சோளம் அதிகபட்ச விலை 1379 ரூபாய்க் கும், குறைந்தபட்ச விலை 1340 ரூபாய்க் கும் விற்கபட்டது. கடந்த வாரம் மக்கா சோளம் 20 லட்சம் ரூபாய்க்கும், எள் 55 ஆயிரம் ரூபாய்க்கும் கொள்முதல் செய்யப்பட்டது.

### துல்லிய பண்ணையம் அமைக்க பயிற்சி முகாம்

நாமக்கல்: துல்லிய பண்ணையம் அமைத்தல் தொடர்பாக, நாமக்கிரிப்பேட்டை விவசாயிகளுக்கு, ரெட்ஸ் தொண்டு நிறுவனம் சார்பில், உழவர் மன்றம் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டது. நாமகிரிப்பேட்டை வட்டாரத்தில், 12 உழவர் மன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. அதில், 30 விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு, துல்லிய பண்ணையம் தொடர்பாக தர்மபுரி மாவட்டம் பாப்பிரெட்டிபட்டிக்கு ரெட்ஸ் தொண்டு நிறுவனம் சார்பில் அழைத்து செல்லப்பட்டனர். அப்போது, குறைந்த செலவில் உற்பத்தியை பெருக்கி லாபம் ஈட்டும் முறையான துல்லிய பண்ணையம், தண்ணீர் சிக்கனம், உரம், பூச்சி மருந்துகளை குறைத்து இயற்கை வேளாண்மை செய்தல் போன்ற பல்வேறு தலைப்புகளில், உழவர் மன்றம் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டது. இதுதவிர, வேளாண் சார்ந்த பல்வேறு பயிற்சி விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டன. நாமக்கல்

மாவட்ட நபார்டு உதவி பொதுமேலாளர் பூவராகன், ரெட்ஸ் தொண்டு நிறுவன செயலாளர் தங்கராஜ், செம்மண் கரடு உழவர் மன்ற செயலாளர் குழந்தைவேல் ஆகியோர் பங்கேற்றனர்.

### விலையில்லா கால்நடைகளுக்கு ஏப்., 30ல் சிறப்பு சிகிச்சை முகாம்

நாமக்கல்: "நாமக்கல் மாவட்டத்தில் வழங்கப்பட்ட விலையில்லா கறவை பசு, வெள்ளாடுகளுக்கு ஏப்ரல், 30ம் தேதி, சிறப்பு சிகிச்சை முகாம் நடக்க உள்ளது' என, மாவட்ட கலெக்டர் ஜகந்நாதன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கை:

நாமக்கல் மாவட்டத்தில், 2012-13ம் ஆண்டு, 3,574 பயனாளிகளுக்கு, 14 ஆயிரத்து, 296 ஆடுகளும், 100 பயனாளிகளுக்கு, 100 கறவை பசுவும், விலையில்லா கறவை பசு மற்றும் வெள்ளாடு திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளது.

அதன்மூலம், 6,490 குட்டிகள் பெறப்பட்டுள்ளது. கறவை பசு, ஆடு வழங்கிய கிராமத்தில் ஏப்ரல், 30ம் தேதி சிறப்பு சிகிச்சை முகாம் நடக்க உள்ளது. எனவே இத்திட்டத்தின் கீழ் பயனடைந்த அனைத்து பயனாளிகளும், தங்களது கால்நடையை முகாமிற்கு அழைத்து வந்து பயன்பெறலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விவசாய மலர்

### வாய்ப்புகையிலை சாகுபடி



ஆகஸ்ட்-செப்டம்பர் மாதங்களில் இரண்டு அல்லது மூன்று உழவுக்குப் பின் இரண்டு அல்லது மூன்று முறை டிராக்டர் மூலம் மண்ணை உழுவது நல்லது. கடைசி உழவுக்கு முன் எக்டேருக்கு 25 டன் தொழு உரம் அல்லது சணப்பு ஒரு எக்டருக்கு 70-75 கிலோ விதை விதைத்து, முளைத்த 45-50 நாட்களில் ரோட்டவேட்டர் அல்லது டிராக்டர் மூலம் உழுவதால் மண்ணிற்கு அங்கக உரம் சேர்க்கப்படுகிறது. மேலும் நடவு செய்யும்போது நாற்று நடும் இடங்களில் சிறு குழிகள் பறித்து

அவற்றில் எக்டேருக்கு 310 கிலோ சூப்பர் பாஸ்பேட்டுடன் 4 பங்கு சலித்த சாணி உரம் கலந்து இடவேண்டும். ஒரு செடிக்கு 17.5 கிராம் சூப்பர் பாஸ்பேட்டும் 70கிராம் சலித்த சாணி உரமும் தேவைப்படும்.

தரமான நாற்றுக்களை தேர்வு செய்து மாலை நேரத்தில் வெயில் தாழ்ந்ததும் 90 x 75 செ.மீ. இடைவெளியில் எக்டேருக்கு 14,815 அல்லது ஏக்கருக்கு 5926 செடிகள் வருமாறு நாற்றுக்களை நடவு செய்ய பரிந்துரைக்கப்படுகிறது. பாழ் நாற்றுக்கள் நட்ட 10 நாட்களுக்குள் நட்டு முடித்துவிட வேண்டும்.

நடவு செய்த மறுநாள் கங்குத்தண்ணீர் பாய்ச்சுவது மிகவும் அவசியம். இளம் பருவத்தில் அதாவது பார் கொத்தி இழுத்துக் கட்டும் வரை குறைந்த அளவு நீர் அடிக்கடி (12 மி.மீ.) 3 அல்லது 4 நாட்களுக்கு ஒரு முறை பாய்ச்சினால் போதுமானது. வளர்ச்சிப் பருவத்தில் மண்வெட்டியால் பார் கொத்தி இழுத்துக்கட்டியபின், அதிக நீர் (36 மி.மீ) பாய்ச்ச வேண்டும். இலை முதிர்ச்சிப் பருவத்தில் அதாவது நட்ட 90 நாட்களுக்குப் பின் 4 அல்லது 5 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்சினால் போதுமானது. வாய்ப்புகையிலைக்கு 25 முதல் 30 முறை தண்ணீர் கட்டப்படுகிறது. புகையிலைக்கு சொட்டுநீர் பாசன முறையில் நீர் பாய்ச்சுவதன் மூலம் நீரை சிக்கனமாக பயன்படுத்தலாம்.

நடவு செய்த 3 வாரங்கள் கழித்து களைக்கொத்து மூலம் களை எடுக்க வேண்டும். நடவு செய்வதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு நாற்று நடும் வயலில் நீர் பாய்ச்சி கரைகளின் மேல் ஒரு எக்டேருக்கு புளூக்குளோரலின் ஒரு லிட்டர் அல்லது ஆக்சிபுளோரோபென் அரை லிட்டர் களைக்கொல்லி மருந்தை 750 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளித்து களைகளை பெருமளவு கட்டுப்படுத்தலாம்.

நட்ட 6-7 வாரங்களுக்குப் பின் (45 நாட்கள் கழித்து) பார்களை மண்வெட்டியால் கொத்தி, பின்பு அதிக நீர் கொள்ளுமாறு ஆழமாக பார் இழுத்துக் கட்ட வேண்டும். வாய்ப்புகையிலைக்கு மேலுரமாக எக்டேருக்கு 125 கிலோ தழைச்சத்து இட பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இதனை இரு சம பகுதிகளாகப் பிரித்து நட்ட 45வது மற்றும் 60வது நாளில் 310 கிலோ அம்மோனியம் சல்பேட் அல்லது 140 கிலோ யூரியாவாக கொடுக்கப்படுகிறது. இதில் முதல் பகுதியை மண்ணிலும் இரண்டாவது பகுதியை 2 சதவீத யூரியா கரைசலாகவும் (200 கிராம் யூரியா, 10 லிட்டர் தண்ணீர் - 150 செடிகளுக்கு) நட்ட 70, 80, 90வது நாட்களில் தெளிப்பதால் 10% கூடுதல் மகசூல் கிடைக்க வாய்ப்புள்ளது. இதனால் அடிக்கடி நீர் பாய்ச்சுவதன் விளைவாக ஏற்படும் உர இழப்பு தவிர்க்கப்படுகிறது. வாய்ப்புகையிலைக்கு எக்டேருக்கு 50 கிலோ சாம்பல் சத்து, மியூரியேட் ஆப் பொட்டாஷாக (85 கிலோ) இட சிபாரிசு செய்யப்படுகிறது.

**கொழுந்து ஒடித்தல்:**

கொழுந்து ஒடிப்பதால் புகையிலையின் தரம் உயர்ந்து மகசூலும் அதிகம் கிடைக்கிறது. நடவு செய்த 60 முதல் 70 நாட்களில் பூ விடும் தருணத்தில் செடியின் அடியிலிருந்து 10 முதல் 12 இலைகள் விட்டு (பழுப்பு இலைகளுடன் சேர்த்து) தண்டு வெளியில் நீட்டிக் கொண்டிராதபடி மேல் இலையை ஒட்டியே கொழுந்து ஒடித்தல் வேண்டும். விட்டுப்போன செடிகளை அடுத்த ஒரு வாரத்திற்குள் கொழுந்து ஒடித்து முடித்துவிட வேண்டும். அப்பொழுதுதான் எல்லா செடிகளும் ஒரே சமயத்தில் சீராக முதிர்ச்சி அடைந்து அறுவடைக்கு வரும். இலைகளின் இடுக்குகளில் சிம்பு வளராமல் தடுத்து கட்டுப்படுத்த டெக்கனால் அல்லது ராயல்டன் அல்லது பவர்-10 ஆகிய சிம்புக்கொல்லி மருந்துகளில் ஏதேனும் ஒன்றினை 6.0% கரைசலை உபயோகிப்பது மிகவும் சிறந்தது. சிம்புக்கொல்லி மருந்து கிடைக்காத பட்சத்தில் சிம்புகளை 7-10 நாட்களுக்கு ஒரு முறை எடுத்துவிட வேண்டும்.

**அறுவடை:**

வாய்ப்புகையிலை நட்ட 120-130 நாட்களில் அறுவடைக்குத் தயாராகிவிடும். இலைகள் நன்றாக முதிர்ந்து சொரசொரவென்று கெட்டியாக எண்ணெய்ப்பிசுக்குடன் பழுப்பு நிறப்புள்ளிகளுடன் காணப்பட்டால் அவை அறுவடைக்குத் தயார் என்று தெரிந்துகொள்ளலாம். இலையின் நடுநரம்பைத் தொட்டு லேசாக அழுத்தினால் உடைவது போல் இருப்பதும் ஒரு அறிகுறி.
**-முனைவர் மு.குமரேசன், வேடசந்தூர்**

## சின்னச்சின்ன செய்திகள்



**பசுவின் பால் பெருக்கும் வழிகள்:**

தேவையான அளவு பசும்புல் தரவேண்டும்.

* வைக்கோலை பசுந்தீவனத்துடன் சேர்த்து தரலாம்.

* அதிகமாக உள்ள பாலைக் கறந்து பசுவிற்கே ஊட்டலாம்.

* ஒரு பங்கு வெல்லம் மற்றும் 3 பங்கு பார்லி கலந்து நன்கு பக்குவம் செய்து தரலாம்.

* பப்பாளிப்பழம் மற்றும் பப்பாளி இலையை வெல்லம் சேர்த்து தரவேண்டும்.

* இலுப்பைப்பூ, புல், வெல்லம் ஆகியவற்றை தண்ணீரில் நனைத்துத் தரலாம்.

* கரும்புத்துண்டு, கருப்பஞ் சக்கையைத் தரலாம்.

* முட்டைக்கோஸ் கீரையைக் கொடுக்கலாம்.

* வில்வப் பழத்தை வேகவைத்துக் கொடுக்கலாம்.

* புரசு இலையையும் இலுப்பைப் பூவையும் தரலாம்.

* சுரைக்காய் மற்றும் இலை தருவதால் பால் பெருகும்.

* வெல்லத்தையும் கடுகையும் சேர்த்து தரலாம்.

* நன்றாக வேகவைக்கப்பட்ட மூங்கில் இலையுடன் உப்பு மற்றும் ஓமம் சேர்த்துத் தரலாம்.

* பால்பெருக்கி இலை தண்ணீர் விட்டான்கிழங்கு, அஸ்வகந்தா பால் பெருக்க உதவும்.

* ஜீரகம்-200 மி.கி., உப்பு -200 மி.கி., சோம்பு-200 மி.கி., லவங்கம்-80 மி.கி., வெண் கந்தகம்-40 மி.கி., படிகாரம்-40 மி.கி., பொட்டாசியம் நைட்ரேட்-40 மி.கி., என்ற விகிதத்தில் கலந்து வைத்துக் கொண்டு காலை, மாலை ஆகிய இருவேளைகளிலும் தீவனத்துடன் ஒரு கைப்பிடி அளவைச் சேர்த்துக் கொடுப்பது பால் பெருக்கச் செய்யும்.

* கன்று ஈன்ற பசுவிற்கு ஈன்ற மூன்றாம் நாளில் உளுந்துக் குருணை 500கி, உப்பு-100கி, மஞ்சள்-50கி, திப்பிலி பொடி-50 கி ஆகியவற்றை தண்ணீரில் கொதிக்கவைத்து அதில் கால் பங்கு வெல்லம் சேர்த்து இளம் சூட்டில் மாலை நேரத்தில் தருவதால் பால் நன்றாகப் பெருகும்.

* சினை மாடுகளுக்கு கன்று ஈன்றபிறகு பால் சுரக்காமல் மடி இறுகிப் போயிருக்கும். இதனால் கன்றுக்குத் தேவையான பால் கிடைக்காது. பசுவின் மடிக்காம்புகளை ஆமணக்கு இலையைச் சூடாக்கி ஒத்தடம் கொடுத்தால் மடி இளகும்.

மாடு வளர்ப்பிற்கு அரசாங்க திட்டங்கள்: அரசாங்க திட்டங்கள் பிராணிகள் நல வாரியம் என்கிற அமைப்பின் மூலம் மாடு வளர்ப் பிற்கு மானியங்கள் வழங்கப் படுகிறது. அதன் திட்டங்களின் முக்கியமான சந்தேகங்களும் அதற்கான பதில்களும் கீழே தரப் பட்டுள்ளன. மேலும் விரிவான விளக்கங்களுக்கு கீழே தரப் பட்டுள்ள முகவரியில் தொடர்புகொள்ளவும். "பிராணிகள் நல வாரியம், 13/1, மூன்றாவது சீவன்ட் ரோடு, வால்மீகி நகர், திருவான்மியூர், சென்னை-41. போன்: 044-2457 1024, 2457 1025. பேக்ஸ்: 044-2457 1016. வெப்சைட்: www.awbc.org

email: awdimd3.vs nl.net.in.,

animalwelfareboard@gmail.com.

**விபூதி:**

இயற்கை சூழ்நிலையில் வளர்க்கப்படும் நம் நாட்டுப் பசுக்களின் சாணத்திலிருந்து மட்டுமே விபூதி தயாரிக்கப்பட வேண்டும். அவ்விபூதியே உண்மையானது. தற்போது விபூதி என்ற பெயரில் விற்கப்படும் வெண்பொடிகள் கருக்காய் உமிச்சாம்பல், டாலமைட், கல்மாவுப்பொடி மற்றும் பேப்பர் கழிவிலிருந்து தயாரிக்கப்படுபவை. இதனைப் பூசுவதும் உட்கொள்வதும் நல்லதல்ல.
**பசு விபூதி தயாரிக்கும் முறை:** சுத்தமான மண் இல்லாத சாணத்தை சேகரித்துக் கொள்ள வேண்டும். அதில் நாட்டு மாட்டுச்சிறுநீரைச் சேர்த்து நன்றாக பிசைந்து உள்ளங்கை அளவுக்கு சிறு சிறு வரட்டியாகத் தட்டிக்கொள்ள வேண்டும். அதை சிமென்ட் தரை அல்லது காட்டன் துணியில் 3 நாட்களுக்கு காய வைக்க வேண்டும்.
நன்கு காய்ந்தவுடன் தரையில் நெல் கருக்காயை 3 அங்கு உயரத்திற்கு பரப்பி அதன் மேல் வரட்டிகளைக் கோபுரம் போல் அடுக்க வேண்டும். பின் சூடத்தைக் கொளுத்தி தீமூட்ட வேண்டும். தொடர்ந்து 5 நாட்கள் புகைந்து தானாக அடங்கிவிடும். சாம்பலானது கட்டி கட்டியாக இருக்கும். அவற்றைத் தனியே எடுத்து கையால் தூளாக்கி பாலிஸ்டர் வேட்டியில் சலித்தால் விபூதி தயார். ஒரு மாட்டிலிருந்து ஒரு நாளைக்கு 2 கிலோ வரை விபூதி தயாரிக்கலாம். இதன் விற்பனை விலை ஒரு கிலோ ரூ.200/- ஆகும். தூய்மையான விபூதியைப் பூசுவதாலும் உட்கொள்வதாலும் தலைவலி, மூக்கடைப்பு, நீர்க்குத்தல், தூக்கமின்மை, வயிற்று நோய் மற்றும் தோல் நோய்கள் நீங்கும்.
**-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்**

## கறவை மாடுகளில் தாது உப்புகளின் பயன்பாடு



கால்சியம், பாஸ்பரஸ், மெக்னீசியம், பொட்டாசியம், சோடியம், குளோரின், கந்தகம் போன்றவைகள் அதிக அளவிலும் தாமிரம், துத்தநாகம், கோபால்ட், மாங்கனீசு, அயோடின், மாலிப்டினம், இரும்பு, செலினியம் போன்றவைகள் குறைந்த அளவிலும் தேவைப்படும் தாது உப்புக்கள் ஆகும்.

**தாது உப்புக்களின் குறைவினால் ஏற்படும் பிரச்னைகள்:** கன்றுகள் மட்டும் கிடேரிகளின் வளர்ச்சி பாதிக்கப்படும். பசுக்கள் சீரான இடைவெளியில் சினைப்பருவத்திற்கு வராததோடு மட்டுமல்லாமல் கருத்தரிப்பும் தடைபடும். கருத்தரித்து இருந்தாலும் சினைக்காலம் முடியும் வரை குட்டிகளைத் தாங்கும் சக்தி குறைந்து கருச்சிதைவு ஏற்பட்டு கன்று வீச்சுகளும் ஏற்படக்கூடும். சில சமயங்களில் தாது உப்புகளின் பற்றாக் குறையினால் இறந்த குட்டிகளை ஈனுதல் மற்றும் குறைமாத, வலிமை குன்றி எலும்பும் தோலுமாக குட்டிகள் பிறக்க நேரிடலாம். ஈன்ற கால்நடைகளின் பால் உற்பத்தி குறையும்.

**தனுவாசு தாது உப்புக்கலவை:** தாது உப்புக்கலவைகள் மினல் மிக்ஸ், மின்கம், புரோமின், அயுமின் எனப் பல பெயர்களில் சந்தைகளில் கிடைக்கப் பெற்றாலும் தனுவாசு தாது உப்புக் கலவை என்ற பெயரில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தால் அறிமுகப் படுத்தப்பட்டு இப்பல்கலைக் கழகத்தின்கீழ் செயல்படும் அனைத்து பயிற்சி நிலையங்கள் மற்றும் வேளாண் அறிவியல் நிலையங்களிலும் 1 கிலோ 55 ரூபாய் வீதத்தில் கிடைக்கப் பெறுகிறது.

**தாது உப்புக்கலவையை அளிக்க வேண்டிய அளவுகள்**

வ.எண். - கால்நடை அளவுகள் (கிராம்/நாள்)

1. - கன்றுகள் - 5

2. - கிடேரிகள் - 15-20

3. - கறவை மற்றும் சினைப்பசுக்கள், காளைகள் - 30-40

4. - கறவை வற்றிய பசுக்கள் - 25-30

மேற்சொன்ன தாது உப்புக்கள் இல்லாமல் உயிர்கள் இயக்கமே இல்லை என்றுகூட சொல்லலாம். எனவே, தாது உப்புக்களை தேவைக்கேற்ற அளவில் தீவனத்தில் கலந்து கொடுப்பதன் மூலம் விவசாயிகள் வருடம் ஒரு கன்று எடுப்பதோடு மட்டுமல்லாமல் கால்நடைகளிலிருந்து அதிக உற்பத்தித் திறனை பெற்று உயர்வடையலாம் என்பது திண்ணம்.

**தாது உப்புக்களின் பயன்கள் மற்றும் குறை நோய்கள்:**

வ.எண். - பெயர் - பயன்கள் - குறைபாடு

1. - கால்சியம்/பாஸ்பரஸ் - எலும்பு வளர்ச்சி - பால்சுரம், ரிக்கட்ஸ் எலும்புருக்கி நோய், சினைப்பிரச்னை

2. - சோடியம் குளோரைடு - உடல்வளர்ச்சி, இனப்பெருக்கம் - பசியின்மை, வளர்ச்சி குன்றல், வலிப்பு நோய்

3. - மெக்னீசியம் - செரிமானம், நரம்பு மண்டல செயல்பாடுகள் - வலிப்பு நோய்

4. - கந்தகம் - உறுப்பு வேலைகள் நுண்ணுயிர் செரிமானம் - எடை குறைதல், அதிக உமிழ்நீர், கண்ணீர் சுரப்பு

5. - இரும்பு - நோய் எதிர்ப்புத்திறன், ரத்த ஓட்டம் - சுவாசக் கோளாறுகள், ரத்தசோகை

6. - தாமிரம் - நரம்பு மண்டல செயல்பாடுகள் - கழிச்சல், பசியின்மை, ரத்தசோகை

7. - மாங்கனீசு - இனப்பெருக்கம் - குறையுடன் கன்றுகள்

8. - கோபால்ட் - வைட்டமின் "பி12' உற்பத்தி - ரத்தசோகை, இனவிருத்தி உறுப்பு வளர்ச்சி குறைவு, கழிச்சல்

9. - செலினியம் - சினைப்பிடிப்பு - கருச்சிதைவு

10. - அயோடின் - தைராய்டு சுரப்பி - வளர்ச்சி குறைந்த கன்று பிறப்பு

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**27.03.2013 A.M**

---

## ஏரிகளில் நீர்மட்டம் சரிவு குடிநீர் தட்டுப்பாடு அபாயம்



சென்னை : சென்னைக்கு குடிநீர் வழங்கும் முக்கிய ஏரிகளின் நீர்மட்டம் வேகமாக குறைந்து வருகிறது. எனவே கோடையில் கடும் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உள்ளது. சென்னைவாசிகளுக்கு பூண்டி, புழல், சோழவரம், செம்பரம்பாக்கம் ஆகிய ஏரிகளில் இருந்து குடிநீர் வினியோகம் செய்யப்படுகிறது. கடந்த வருடம் போதிய அளவில் மழை பெய்யாததாலும், தற்போது நாளுக்கு நாள் வெயிலின் தாக்கம் அதிகரித்து வருவதாலும் ஏரிகளின் நீர்மட்டம் வேகமாக குறைந்து வருகிறது.

பூண்டி ஏரியின் மொத்த கொள்ளவு 3231 மில்லியன் கனஅடி. தற்போது 491 மில்லியன் கனஅடி நீர் உள்ளது. கிருஷ்ணா கால்வாய் மூலம் ஏரிக்கு நீர்வரத்து வினாடிக்கு 85 கனஅடியாக உள்ளது. பூண்டியில் இருந்து செம்பரம்பாக்கம் ஏரிக்கு இணைப்பு கால்வாய் மூலம் 290 கனஅடியும், பேபி கால்வாய் மூலம் 20 கனஅடியும் திறந்து விடப்பட்டுள்ளது.

புழல் ஏரியின் மொத்த கொள்ளளவு 3300 மில்லியன் கனஅடி. தற்போது தண்ணீர் இருப்பு 1818 மில்லியன் கனஅடி ஆகும். குடிநீருக்காக வினாடிக்கு 126 கனஅடி நீர் திறந்து விடப்பட்டுள்ளது. செம்பரம்பாக்கம் ஏரியின் மொத்த கொள்ளளவு 3645 மில்லியன் கனஅடி. தற்போது தண்ணீர் இருப்பு 1765 மில்லியன் கனஅடியாக உள்ளது. ஏரிக்கு தண்ணீர் வரத்து பூண்டி ஏரியில் இருந்து

வினாடிக்கு 270 கன அடியாகவும். குடிநீருக்காக வினாடிக்கு 150 கனஅடியும் திறந்து விடப்பட்டுள்ளது.

சோழவரம் ஏரியின் மொத்த கொள்ளளவு 881 மில்லியன் கனஅடி. தற்போது 78 மில்லியன் கனஅடி தண்ணீர் மட்டுமே உள்ளது. சென்னைக்கு குடிநீர் வழங்கும் ஏரிகளில் கடந்த ஆண்டு இதே காலத்தில் இருந்ததை விட தற்போது தண்ணீர் இருப்பு குறைவாக உள்ளது. மேலும் ஆற்றுப்படுகையில் மணல் எடுப்பதால் நிலத்தடி நீரும் குறைந்துள்ளது. எனவே கோடையில் சென்னைக்கு குடிநீர் தட்டுப்பாடு அபாயம் ஏற்படும் என்று கூறப்படுகிறது.

### மல்லிகை விலை கிலோ ரூ.600



நெல்லை : பங்குனி உத்திர திருவிழாவை முன்னிட்டு மல்லிகை பூ விலை இரு மடங்காக உயர்ந்தது. கோடை வெயில் காரணமாக நெல்லை மாவட்டத்தில் சில தினங்களாக பூக்கள் தட்டுபாடின்றி கிடைத்து வருகிறது. இந்நிலையில், பங்குனி உத்திரத்தை முன்னிட்டு நேற்று பூக்கள் விலை திடீரென உயர்ந்தது. இரு தினங்களுக்கு முன்பு வரை ஒரு கிலோ மல்லிகை ரூ.250 முதல் ரூ.300 வரை விற்ற நிலையில், நேற்று மல்லி விலை ரூ.600 என உயர்ந்தது. கனகாம்பரம் ஒரு கிலோ ஆயிரத்திற்கு நேற்று பாளை பூ மார்க்கெட்டில் விற்கப்பட்டது. ரோஜா, ரூ.250, சம்பங்கி,ரூ.200, கேந்தி ரூ.70, பிச்சி ரூ.750, கோழி பூ ரூ.50.

### பருப்பு வகைகள் ஏற்றுமதிக்கு மேலும் ஓராண்டு தடை



புதுடெல்லி : பருப்பு வகைகள் தேவை உள்நாட்டிலேயே அதிகமாக இருந்ததால், அவற்றை ஏற்றுமதி செய்ய முதன்முதலில் 2006ம் ஆண்டில் 6 மாதங்களுக்கு தடை விதிக்கப்பட்டது. பின்னர், அவ்வப்போது தடை நீட்டிக்கப்பட்டு வந்தது.

கடைசியாக இம்மாதம் 31ம் தேதி வரை தடை விதிக்கப்பட்டது. இந்நிலையில், இந்த தடையை அடுத்த ஆண்டு மார்ச் 31ம் தேதி வரை நீட்டிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அதே சமயத்தில் காபுலி கொண்டைக் கடலை, இயற்கை  உரங்கள் மூலம் விளைவிக்கப்பட்ட பருப்பு மற்றும் பயறு வகைகளை ஆண்டுக்கு 10 ஆயிரம் மெட்ரிக் டன் வரை ஏற்றுமதி செய்ய அனுமதிக்கப்படும் என்று வெளிநாட்டு வர்த்தக தலைமை இயக்குனரகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்றைய வேளாண் செய்திகள்

27.03.2013 A.M

## குறைந்த செலவில் அதிக லாபம் சொட்டு நீர் பாசனம் அமைத்து சாதித்து காட்டிய விவசாயி

நெல்லை

ஆலங்குளம் விவசாயி தங்மணி நாடார் சொட்டுநீர் பாசனம் அமைத்து, குறைந்த செலவில் அதிக லாபம் பெற்றார்.

14 ஏக்கர் நிலம், கிணற்று நீர் பாசனம். காய்கறி பயிர்கள் சாகுபடி செய்ய ஆசை. என்ன செய்வது என்று குழம்பிய ஆலங்குளம் விவசாயி தங்கமணி நாடாருக்கு சொட்டுநீர் பாசனம் கை கொடுத்தது. சொட்டு நீர் பாசனம் மூலம் எப்படி 14 ஏக்கர் நிலத்திலும் காய்கறி பயிர்களை சாகுபடி செய்து, சாதனை படைத்தார் என்பது குறித்த தகவல்களை நாமும் தெரிந்து கொள்ள தங்கமணி நாடாரை அவருடைய தோட்டத்தில் சந்தித்தோம்.

<u>தோட்டக்கலைத்துறை</u>

சொட்டுநீர் பாசனம் மூலம் தான் அடைந்த லாபம் குறித்த தகவல்களை நம்மிடம் பகிர்ந்து கொண்டார். அதன் விவரம் வருமாறு:–

நெல்லை– தென்காசி மெயின் ரோட்டில் மாறாந்தை ஊருக்கு மேற்கு பகுதியில் 14 ஏக்கர் நிலம் உள்ளது. இந்த நிலத்தில் காய்கறி பயிர்கள் பயிரிட நினைத்தேன். ஆனால் கிணற்று பாசனம் மூலம் 14 ஏக்கருக்கும் வாய்க்கால் மூலம் தண்ணீரை கொண்டு சென்று சாகுபடி செய்யலாமா?. வேறு ஏதாவது வழிமுறைகள் இருக்கிறதா என்று யோசிக்க தொடங்கினேன். அப்போது தோட்டக்கலைத்துறை மூலம் சொட்டுநீர் பாசனம் செயல்படுத்தப்பட்டு வருவதை அறிந்தேன்.

உடனே தோட்டக்கலைத்துறை அதிகாரிகளை சந்தித்து, என்னுடைய விவசாய நிலம் குறித்த தகவல்களையும், அதில் காய்கறி பயிர்கள் சாகுபடி செய்ய வேண்டும் என்ற ஆசையையும்

கூறினேன். அதற்கு அவர்கள், உங்களது ஆசையை சொட்டுநீர் பாசனம் மூலம் நிறைவேற்றி விடலாம் என்று நினைத்து அதற்கான அனைத்து உதவிகளையும் செய்து தந்தனர்.

எனது தோட்டத்தில் 5 ஏக்கரில் சுரைக்காயும், ஒரு ஏக்கரில் பாகல்காயும், 3 ஏக்கரில் தடிப்பூசணியும், 2 ஏக்கரில் புடலைங்காயும், ஒரு ஏக்கரில் சாம்பார் வெள்ளரியும் பயிரிட்டேன். சொட்டுநீர் பாசனம் என்பதால் நீர் பாய்ச்சுவதற்கு என்று, வேலையாட்கள் நியமிக்கவில்லை. களை பறிப்பு என்பதற்காக வேலை ஆட்களையும் நியமிக்கவில்லை. சொட்டுநீர் பாசனம் மூலம் நீர் நேரடியாக பயிரின் வேர் பகுதிக்கு கொண்டு செல்லப்படுவதால், பயிர் வளர்ச்சிக்கு நீரின் தேவையும் குறைவு.

<u>அதிக லாபம்</u>

5 ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள சுரைக்காய் 60 டன் விளைச்சல் ஆனது. இதன் மூலம் ரூ.1 லட்சத்து 20 ஆயிரம் கிடைத்தது. அதற்கான பராமரிப்புக்கு ரூ.80 ஆயிரம் செலவானது. மீதமுள்ள 40 ஆயிரம் எனக்கு லாபமாக கிடைத்தது.

இதேபோல் 2 ஏக்கரில் பயிரிடப்பட்ட புடலைங்காய் 4 டன் மகசூல் ஆனது. இதன் மூலம் ரூ.28 ஆயிரம் வருமானம் வந்தது. ஆனால் மகசூல் செய்ய ஆன செலவோ ரூ.14 ஆயிரம். எனக்கு கிடைத்த லாபமோ ரூ.14 ஆயிரம்.

ஒரு ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்ட சாம்பார் வெள்ளரி 2 டன் விளைச்சல் ஆகி ரூ.15 ஆயிரத்துக்கு விற்பனை ஆனது. சாகுபடி செலவு ரூ.10 ஆயிரம் ஆனாலும், அதன் மூலம் ரூ.5 ஆயிரம் லாபம் கிடைத்தது.

இது தவிர தடிப்பூசணி சாகுபடியின் மூலம் 9 டன் தடிப்பூசணி மகசூல் ஆனது. அதனை விற்றதில் கிடைத்த ரூ.36 ஆயிரத்தில், சாகுபடி செலவானது ரூ.15 ஆயிரம் போக லாபமாக ரூ.21 ஆயிரம் கிடைத்தது. இதேபோல் ஒரு ஏக்கரில் சாகுபடி செய்த பாகற்காயும் எனக்கு லாபம் பெற்று தந்தது.

மொத்தத்தில் சொட்டுநீர் பாசனம் மூலம் சாகுபடி முறைகளை மேற்கொண்டதால், இந்த லாபம் பெற முடிந்தது என்று மகிழ்ச்சியாக முடித்தார் தங்கமணி நாடார்.

<u>கலெக்டர் பாராட்டு</u>

தங்கமணிநாடார் தோட்டத்தை, கலெக்டர் சி.சமயமூர்த்தி, தோட்டக்கலை துணை இயக்குனர் ராஜன் ரவிச்சந்திரன் மற்றும் அதிகாரிகள் பார்வையிட்டனர். அப்போது சொட்டுநீர் பாசனம்

மூலம் அதிக விளைச்சலாகி கிடந்த சுரைக்காய், புடலைங்காய், பாகற்காய், சாம்பார் வெள்ளரி உள்ளிட்ட பயிர்களை பார்வையிட்டு, கேட்டறிந்தார்.

பின்னர் விவசாயி தங்கமணி நாடாரை பாராட்டிய கலெக்டர், அரசு உதவிகளை இன்னும் கூடுதலாக பெற்று, அதிக அளவு விவசாயம் செய்ய வேண்டும் என்று கூறினார்.

<u>தோட்டக்கலை அதிகாரி</u>

விவசாயிகளுக்கு தோட்டக்கலைத்துறை சாகுபடியை ஊக்குவிக்கும் பொருட்டு அளிக்கப்படும் உதவிகள் குறித்து தோட்டக்கலை துணை இயக்குனர் ராஜன் ரவிச்சந்திரன் கூறியதாவது:–

ஆலங்குளம் விவசாயி தங்கமணி நாடார் சொட்டுநீர் பாசனம் அமைக்க ரூ.4 லட்சம் செலவு ஆனது. அதற்காக 75 சதவீதம் மானியம் கொடுத்தோம். அதாவது ரூ.3 லட்சம் மானியமாக வழங்கப்பட்டது. இதன்மூலம் அவர் அதிக லாபம் பெற வாய்ப்பாக அமைந்தது. இது போக 5 ஏக்கருக்கு குறைவாக இருந்தால் 100 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது.

மேலும் விவசாய நிலத்தின் பரப்பை பொறுத்தும், பயிர்களின் இடைவெளியை பொறுத்தும் மானியங்கள் வேறுபடும். அதாவது பரப்பு அதிகரித்தால் மானியமும் அதிகரிக்கும். பயிர்களின் இடைவெளி அதிகரித்தால் மானியம் குறைவாக கிடைக்கும். இது தவிர தோட்டக்கலை பயிர்களுக்கு மானியம் பெற விரும்புவோர், அந்ததந்த பகுதிகளில் உள்ள தோட்டக்கலை அலுவலர்களை நேரில் அணுகி பயன் அடையலாம்.

இவ்வாறு தோட்டக்கலை துணை இயக்குனர் ராஜன் ரவிச்சந்திரன் கூறி உள்ளார்.

## பருப்பு ஏற்றுமதி தடை ஓராண்டிற்கு நீட்டிப்பு

புதுடெல்லி.,

மத்திய அரசு பருப்பு ஏற்றுமதி தடையை மேலும் ஓராண்டிற்கு நீட்டிப்பு செய்துள்ளது. அதேசமயம் சிலவகை பருப்புகள் ஏற்றுமதிக்கு மட்டும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இவற்றிற்கான உச்சவரம்பு 10,000 டன்னாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

உலக அளவில், பருப்பு உற்பத்தியில் இந்தியா முதலிடத்தில் உள்ளது. அதேசமயம் தேவையை விட உற்பத்தி குறைவாக உள்ளதால் தேவையை ஈடுசெய்ய 30 லட்சம் டன் பருப்பு இறக்குமதி செய்யப்படுகிறது.

உள்நாட்டு தேவைப்பாட்டைக் கருதி கடந்த 2006–ஆம் ஆண்டில் முதற்கட்டமாக ஆறு மாதங்களுக்கு பருப்பு ஏற்றுமதிக்கு தடை விதிக்கப்பட்டது. இது அவ்வப்போது நீட்டிக்கப்பட்டு இறுதியாக 2013 மார்ச் 31–ந் தேதி வரை நீட்டிக்கப்பட்டது. இது தற்போது 2014 மார்ச் 31–ந் தேதி வரை மேலும் ஓராண்டிற்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

## நடப்பு 2012–13 பருவத்தில் நாட்டின் சர்க்கரை உற்பத்தி 2.50 கோடி டன்னாக குறையும்

புதுடெல்லி,

நடப்பு 2012–13 (அக்டோபர் – செப்டம்பர்) பருவத்தில் சர்க்கரை உற்பத்தி 2.50 கோடி டன்னாக குறையும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது, 2011–12 பருவத்தில் 2.60 கோடி டன்னாக இருந்தது. இதனுடன் ஒப்பிடும்போது உற்பத்தி 4 சதவீதம் குறையும். கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் தேசிய கூட்டமைப்பு வெளியிட்டுள்ள புள்ளிவிவரம் வாயிலாக இது தெரிய வந்துள்ளது.

**சாகுபடி**

கரும்பு அதிகம் விளையும் மகாராஷ்டிரா மாநிலத்தில் கரும்பு சாகுபடி இன்னும் ஆரம்பிக்கவில்லை. மிகவும் குறைந்த அளவில் மழை பெய்துள்ள நிலையில் விவசாயிகள் கரும்புக்கு பதிலாக மாற்று பயிர்களை சாகுபடி செய்து வருகின்றனர். மேலும், மாநில அரசு பாசனத்துக்கு நீரை பயன்படுத்தாமல் குடிநீருக்காக சேமித்து வைத்து வருகிறது. இதுபோன்ற காரணங்களால் மகாராஷ்டிராவில் கரும்பு உற்பத்தி மிகவும் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

எனினும் முதற்கட்ட மதிப்பீட்டைக் காட்டிலும் இம்மாநிலத்தில் உற்பத்தி 17 லட்சம் டன் அதிகரித்து 80 லட்சம் டன்னாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. சர்க்கரை உற்பத்தியில் இரண்டாவது இடத்தில் உள்ள உத்தரபிரதேசத்தில் உற்பத்தி முதற்கட்ட மதிப்பீட்டைக் காட்டிலும் உற்பத்தி 10 லட்சம் டன் அதிகரித்து 80 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளதால் நடப்பு பருவத்தில் சர்க்கரை உற்பத்தி இலக்கை எட்டும் என விவசாய துறை அமைச்சர் சரத்பவார் தெரிவித்துள்ளார்.

நடப்பு பருவத்தின், முதல் ஐந்து மாதங்களில் (அக்டோபர்–பிப்ரவரி) சர்க்கரை உற்பத்தி 1.88 கோடி டன்னாக உள்ளது. உத்தரபிரதேசத்தில் உற்பத்தி அதிகரித்துள்ளதால், மொத்தத்தில் சர்க்கரை உற்பத்தி 2.50 கோடி டன்னாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் இது தேவைப்பாட்டைக் காட்டிலும் 20 லட்சம் டன் அதிகமாகும். எனவே சர்க்கரையை இறக்குமதி செய்ய வேண்டிய அவசியம் இல்லை என நிபுணர் ஒருவர் தெரிவித்தார்.

**<u>ஏற்றுமதி</u>**

இந்தியா சர்க்கரை உற்பத்தியில் பிரேசிலுக்கு அடுத்தபடியாக இரண்டாவது இடத்தில் உள்ளது. இந்தியா சர்க்கரை ஏற்றுமதி செய்யும்போது சர்வதேச சந்தையில் விலை குறையும். அதேசமயம், இறக்குமதி செய்யும்போது உள்நாட்டில் விலை அதிகரிக்கும்.

## சீனாவுடன் ஒப்பிடும்போது இந்தியாவில் நெல், கோதுமை உற்பத்தி திறன் மிகவும் குறைவு

புதுடெல்லி,

சீனாவுடன் ஒப்பிடும்போது இந்தியாவில் நெல், கோதுமை உற்பத்தி திறன் மிகவும் குறைவாக உள்ளது. விவசாய துறைக்கான மத்திய இணை அமைச்சர் தாரிக் அன்வர் பாராளுமன்ற மாநிலங்களவையில் இதனை தெரிவித்தார்.

**<u>சாதாரண தானியங்கள்</u>**

பிரதான உணவு தானியங்களான நெல், கோதுமை மட்டுமல்லாமல் கம்பு, கேழ்வரகு போன்ற சாதாரண தானியங்கள், பருப்பு உற்பத்தி திறனும் குறைவாக உள்ளது கண்டறியப்பட்டுள்ளது. எனினும் எண்ணெய் வித்துக்கள், கரும்பு ஆகிய பயிர்களை பொறுத்தவரை உற்பத்தி திறன் சீனாவை விட ஓரளவிற்கு அதிகமாக உள்ளதாக தெரிகிறது.

சீனாவில், 2011–ஆம் ஆண்டில் ஒரு ஹெக்டேரில் 6,686 கிலோ நெல் விளைந்தது. ஆனால் இந்தியாவில் 3,590 கிலோ மட்டுமே உற்பத்தியானது. சீனா மட்டுமல்லாமல் மியான்மர் (4,081 கிலோ), வங்காளதேசம் (4,219 கிலோ) ஆகிய நாடுகளுடன் ஒப்பிடும்போது கூட நம் நாட்டில் உற்பத்தி திறன் குறைவாகவே உள்ளது.

இந்த நிலையில் கோதுமை உற்பத்தி இதை விட குறைவாக உள்ளது. 2011–ஆம் ஆண்டில் சீனாவில் ஒரு ஹெக்டேரில் 4,838 கிலோ கோதுமை உற்பத்தியானது. இந்தியாவிலோ ஹெக்டேருக்கு 1,661 கிலோ கோதுமை விளைந்தது.

பருப்பு வகைகளை பொறுத்தவரை வங்காளதேசம், பூட்டான், சீனா, மியான்மர், நேபாளம், இலங்கை ஆகிய ஆறு நாடுகளுடன் ஒப்பிடும்போது நம் நாட்டில் உற்பத்தி மிக மிக குறைவாக உள்ளது. இந்தியாவில் ஹெக்டேருக்கு 699 கிலோ மட்டுமே பருப்பு விளைந்த நிலையில், சீனாவில் 1,533 கிலோ உற்பத்தியாகியுள்ளது. எனினும் இந்த விஷயத்தில் பாகிஸ்தானுக்கு (517 கிலோ) ஒரு படி மேலேதான் இந்தியா உள்ளது.

**<u>எண்ணெய் வித்துக்கள்</u>**

நம் நாட்டில் எள், நிலக்கடலை போன்ற எண்ணெய் வித்துக்கள் மற்றும் கரும்பு உற்பத்தி திறன் சீனா உள்ளிட்ட அனைத்து அண்டை நாடுகளை காட்டிலும் சற்றே அதிகமாக உள்ளது. இந்தியாவில், 2011–ல் ஒரு ஹெக்டேரில் எண்ணெய் வித்துக்கள் 1,133 கிலோவும், கரும்பு 71,668 கிலோவும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இது சீனாவில் முறையே 619 கிலோ மற்றும் 66,519 கிலோ அளவிற்கே இருந்தது.

## தேனி மாவட்டத்தில் திடீர் மழையால் குடிநீர் தட்டுப்பாடு குறைகிறது மஞ்சளாறு அணையில் அதிகபட்சமாக 124 மில்லிமீட்டர் மழை

கூடலூர்,

தேனி மாவட்டத்தில் நேற்று முன்தினம் பெய்த திடீர் மழையால் மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும் குடிநீர் தட்டுப்பாடு ஓரளவு குறை யும் நிலை உருவாகி உள்ளது. மஞ்சளாறு அணையில் அதிக பட்ச மாக 124 மில்லி மீட்டர் மழை பதிவாகி உள்ளது.

திடீர் மழை

தேனி மாவட்டத்தில் போடி, தேனி, பெரியகுளம், ஆண்டிப்பட்டி என மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் நேற்று முன்தினம் திடீர் மழை பெய்தது. தேனி நகரில் நேற்று முன்தினம் இரவு 8 மணிக்கு பெய்ய தொடங்கிய பலத்த மழை சுமார் 2 மணி நேரம் நீடித்தது. இடி– மின்னலுடன் பலத்த மழை பெய்தது. இதனால் சாலை களில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. இந்த திடீர் மழை குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக பெய்துள்ள தாக வானிலை ஆய்வு மையம் கூறி உள்ளது.

இந்த திடீர் மழையால் வறண்டு கிடந்த வைகை ஆற்றில் நீர்வரத்து அதிகரித்து உள்ளது. தற்போது பல்வேறு பகுதிகளில் மானாவாரி பயிர் சாகுபடி செய்த விவசாயி களுக்கு இந்த மழை மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. அதே நேரத்தில் இந்த திடீர் மழை காரணமாக கிராமங்கள் மற்றும் நகரங்கள் என மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும் தற்போது ஏற்பட்டு வந்த குடிநீர் தட்டுப் பாடு ஒரளவு குறையும் என்று பொதுமக்கள் நம்பிக்கை தெரிவித்தனர்.

மழையளவு

தேனி மாவட்டத்தில் நேற்று முன்தினம் அதிகபட்சமாக மஞ்சளாறு அணையில் 124 மில்லிமீட்டர் மழை பதிவாகி உள்ளது. தேக்கடி அணைப் பகுதியில் 25 மில்லிமீட்டர் மழையும், பெரியாறு அணையில் 2 மில்லிமீட்டர் மழையும் பதிவாகி உள்ளது.

தேனி மாவட்டத்தில் நேற்று முன்தினம் காலை 8 மணி முதல் நேற்று காலை 8 மணி வரை பெய்த மழையளவு விவரம் (மில்லிமீட்டரில்) வருமாறு:– தேனி–14.6, போடி –32, கூடலூர்–24, பெரிய குளம்–82, மஞ்சளாறு–124, சோத்துப் பாறை–36, உத்தமபாளை யம்–10, வைகை அணை–15, வீரபாண்டி–63,  சண்முகாநதி அணை–3.